DINAMALAR

28 APR 2022

PAGE 4

# 'போதையில்லா புதுச்சேரி' பயிற்சி பட்டறை பேராசிரியர்கள் பங்கேற்க அழைப்பு

**புதுச்சேரி, ஏப்.28–**

'போதையில்லா புதுச்சேரி' என்ற இருநாள் பயிற்சிப் பட்டறைக்கு உயர் கல்வி நிறுவன பேராசிரியர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக திட்ட இயக்குநர் மற்றும் சமூகப்பணி துறை பேராசிரியர் நளினி, டாக்டர் இப்திகர் ஆலம் வெளியிட்டுள்ள அறிக்கை:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமூகப்பணித் துறை, மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்துடன் இணைந்து, 'போதையில்லா புதுச்சேரி மாவட்டத்தை நோக்கி" என்ற பயிற்சி முகாம் வரும் 5 மற்றும் 6ம் தேதி நடைபெற உள்ளது.

இந்த முகாமில் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் புதுச்சேரியில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொள்ளலாம்.

போதைப்பொருள் பயன்பாட்டின் பல்வேறு தீய அம்சங்கள், மாணவர்களின் வாழ்வில் அதன் தாக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே பயிற்சியின் நோக்கமாகும்.

மாணவர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை கண்டறிந்து ஆலோசனை வழங்குதல், ஆசிரியர்களுடன் மாணவர் சமூக ஆதரவு மன்றங்களை உருவாக்குதல் குறித்தும் ஆலோசனை வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் HTTPS://FORMS.GLE/GGASRKJ8UG9HFUVZ7 அல்லது drugfreepuducherry@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது விருப்பத்தை அனுப்பி பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

28 APR 2022

PAGE 2



# பல்கலைக் கழகத்தில் போராட்டம் நடத்த தடை

**புதுச்சேரி, ஏப். 28–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் போராட்டம் நடத்த திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர், அனைத்து துறைகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

புதுச்சேரி பல்கலைக் கழக வளாகத்தில் நலச் சங்கங்கள் போராட்டம் நடத்தவோ, கூட்டங்கள் நடத்தவோ கூடாது என ஏற்கனவே அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் அமைதியான சூழலை குலைக்கும் வகையில் முன் அனுமதி இல்லாமல் போராட்டம், கூட்டம் நடத்த தடை விதிக்கப்படுகிறது. இதனை மீறினால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

தூய காற்று பெற மரம் வளர்ப்போம்